IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.
E.A.39/19 in E.P. 66/2016 in O.S.NO:105/2011

**DEP OF WITNESS:** PW1 NAME:Pachaiyappan Date: 18.07.2021

**குறுக்கு விசாரணை**

தாவா சொத்து புதுப்பேட்டை ராஜா தெருவில் உள்ளது. சர்வே எண்.740 முதல் 743 வரை உள்ளது. எனக்கு எழுத படிக்க தெரியாது. ம.சா.ஆ.5 அ.எண்.938/1982 வழக்கின் தீர்ப்பில் சர்வே எண்ணே அல்லது ராஜா தெருவில் தாவா வழக்கு குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் எனக்கு எழுத படிக்க தெரியாது அதனால் எனக்கு தெரியாது. எனது தந்தை தாவா சொத்தை பகுதியாக வாங்கினார் 1979 ல் வாங்கினார் என்று நினைக்கிறேன். அசல் ஆவணம் என்னிடம் இல்லை. மா.சா.ஆ.4 ன் அசல் ஆவணம் என்னிடம் தான் உள்ளது. மா.சா.ஆ.1 மற்றும் 2 ன் அசல் ஆவணம் என்னிடம் இல்லை. மா.சா.ஆ.3 ன் அசல் ஆவணம் என்னிடம் இல்லை. மா.சா.ஆ.1 முதல் 3 அசல் ஆவணம் என்னிடம் இல்லை என்ற சங்கதியை எனது பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. மா.சா.ஆ.4 ல் அசல் ஆவணம் என்னிடம் தான் உள்ளது என்றும் அதை ஏன் தாக்கல் செய்யவில்லை என்ற விவரத்தை நான் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. மா.சா.ஆ.4 அசல் ஆவணத்துடன் ஒப்பிட்டு பார்த்தால் தான் உண்மை தன்மை தெரியவரும் என்றால் சரிதான். மா.சா.ஆ.1 முதல் 4 ஆவணத்தின் சொத்து விவரத்தில் ராஜா தெரு என்று குறிப்பிடவில்லை என்றாலும் ஒட்ட பஜனை கோயில் தெரு என்று உள்ளது என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.938/1982 என்ற வழக்கை யார் தொடர்ந்தார் என்றால் முனிதாஸ் என்கின்ற முனிரத்தினம் வழக்கை தாக்கல் செய்தார். மேற்சொன்ன அசல் வழக்கின் தீர்ப்பின் நகல் என்னிடம் உள்ளது. மேற்சொன்ன வழக்கை எந்த அடிப்படையில் தாக்கல் செய்தார்கள் என்றால் அந்த வழக்கின் தீரப்பு நகலை பார்த்து தான் சொல்ல முடியும். அந்த வழக்கில் அடமானம் வைத்ததின் பேரிலும் சொத்து என்னுடையது பேரில் வழக்கு தாக்கல் செய்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எனது அக்கா பெயர் செல்வி என்று தான் வழக்கில் குறிப்பிட்டுள்ளேன் ஆனால் அவரின் முழுபெயர் செல்வி என்கின்ற செல்வம் என்று குறிப்பிபடப்பட்டுள்ளது. எனது அம்மா சாலம்மாளின் வாரிசு சான்றிதழில் எனது அக்காவின் பெயர் செல்வம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வாரிசு சான்றிதழ் என் வழக்கறிஞரால்

கொடுக்கப்பட்டது தான். அந்த வாரிசு சான்றிதழை எ.ம.சா.ஆ.1 ஆக குறியிடு செய்யப்படுகிறது. மேற்சொன்ன வாரிசு சான்றிதழ் வட்டாட்சியர் அலுவலகத்தில் வழங்கப்பட்டதல்ல மோசடியாக தயார்செய்யப்பட்ட வாரிசு சான்றிதழ் என்றால் சரியல்ல. அப்படி வாரிசு சான்றிதழ் ஒருவருக்கு இறு பெயர்கள் இருந்தால் வாரிசு சான்றிதழில் இரண்டு பெயர்கள் வழங்கப்பட்டிருக்கும் அப்படி குறிப்பிடாததால் மோசடியாக தயார் செய்யப்பட்டு வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.6 மற்றும் ம.சா.ஆ.7 ல் எனது அக்காவின் பெயர் செல்வி என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால் செல்வி என்பவர் வேறு என்றாலும் செல்வம் என்பவர் வேறு ஒரு நபர் சாலம்மாளின் வாரிசு சான்றிதழில் வேறு ஒருவரை காண்பித்து தான் சான்றிதழ் பெறப்பட்டது என்றால் சரியல்ல. எனது அக்கா செல்வி எப்பொழுது எந்த ஆண்டு பிறந்தார் என்று ஞாபகம் இல்லை. எனது அக்கா செல்வி தற்போது சென்னையில் வசித்து வருகிறார். எனது அக்கா செல்வி ஆதார் அட்டையில் திருவள்ளூர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் திருவள்ளூர் மாவட்டத்தில் அம்பத்தூரில் வசித்து வருகிறார். ம.சா.ஆ.4 உண்மையானது என்பதை எனதுஅக்கா செல்வியை அழைத்து விசாரித்தால் தான் உண்மை தெரியவரும் என்றால் சரிதான். 25.06.2019 ம் தேதி தான் ஏலம் விடும் நோட்டீஸ் பெற்றபின்பு தான் அடமானம் பற்றி தெரியவரும் என்றால் சரிதான். மா.சா.ஆ.4 பதிவு செய்த போது வில்லங்கம் சான்றிதழ் பார்த்து தான் பதிவு செய்யப்பட்டதா என்றால் நான் வில்லங்கம் பெறவில்லை நீதிமன்ற நகலை வைத்த தான் பதிவு செய்தேன். இன்றுவரை நான் வில்லங்கத்தை பார்க்கவில்லை. சொத்து எதன் அடிப்படையில் டிகிரி பெற்று ஏலத்திற்கு எடுத்துவரப்பெற்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. சாலம்மாள் அடமானம் போட்ட விவரம் எனக்கு 1983 ல் தெரியும் என்றால் சரியல்ல. எனது பிரமாண பத்திரத்திலும் மற்றும் கிளைம் மனுவில் எதன் அக்காவின் பெயர் செல்வம் என்று குறிப்பிடவில்லை செல்வி என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இம்மனுவை ஏலத்தை தடுப்பதற்காக மனு தாக்கல் செய்துள்ளேன். அடமானத்தை ரத்து செய்வதற்கு இந்த நீதிமன்றத்தில் அதிகாரம் கேட்க முடியாது என்றால் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்திலும் மற்றும் கிளைம் பெட்டிசனிலும் நானும் என் தாயார், சகோதரி செல்வி மற்றும் பங்காரம்மாள் ஆகிய 4 வருக்கும் தான் உரிமைபட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்

சரிதான். நீதிமன்ற தீரப்பிலும் அப்படித்தான் தீர்மானிக்கப்பட்டது என்றால் சரிதான். என்னுடைய அக்கு விடுதலை பத்திரமான மா.சா.ஆ.4 பங்காளம்மாளை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்சொன்ன மா.சா.ஆ.4 ல் பங்காருஅம்மாளுக்கு சொந்தமான 4 ல் ஒரு பங்கை பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பங்காரம்மாள் எனது பெரியம்மா. பங்காரம்மாள் பங்கை தான் எனது அப்பா கிரயம் பெற்றுள்ளார். அதற்குண்டான சங்கதிகளை பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளேன். மா.சா.ஆ.8 ல் மாணிக்கம் மனைவி சாலம்மாள் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். மா.சா.ஆ.9 ல் பச்சையப்பன் என்ற பெயர் திருத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது பெயரில் வீட்டு வரி ரசீது உள்ளது. ஆனால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மின் இணைப்பின் ரசீதைமட்டும்தான் தாக்கல் செய்துள்ளேன். மா.சா.ஆ.8 ல் மற்றும் மா.சா.ஆ.9 பட்டா மற்றும் அடங்கலில் தெருவின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்படவில்லை, மா.சா.ஆ.11 மின் இணைப்பு கட்டண ரசீதியில் தெருவின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எனது குடும்பத்தில் செல்வம் என்ற பெயரே இல்லை போர்ஜரியாக தயாரிக்கப்பட்டது என்றம் உண்மையில் நான் வாரிசு சான்றிதழ் பெற்றிருந்தால் பிரமாண வாக்குமூலத்திலும் கிளைம் பெட்டிசனிலும் வாரிசு சான்றிதழ் பற்றி குறிப்பிட்டிருப்பேன் என்றால் சரியல்ல. சொத்தின் அளவு விவரம் எனக்கு தெரியாது. 45 க்கு 43 அகலம். மா.சா.ஆ.4 ல் பக்கம் 7 ல் சொத்து விவரத்தில் கதவிலக்க எண் 6 என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை 7 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அது புது எண் என்பதால் அப்படி குறிப்பிடப்பட்டுள்ளது பழைய எண் குறிப்பிடப்படவில்லை. இ.பி.பெட்டிசனில் பழைய கதவு எண்.4,5,6 புதிய கதவு எண்.5,6 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதை பார்த்து தான் அறிவிப்பு கதவில் ஒட்டிவைக்கப்பட்டது என்றால் சரிதான். மா.சா.ஆ.4 ல் உள்ள சொத்து விவரத்தை குறித்து தான் சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்று உரிமை கோருகிறேன் என்றால் சரிதான். அந்த சொத்து விவரத்தில் கதவிலக்க எண்.7 என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மா.சா.ஆ.4 வைத்து தான் மா.சா.ஆ.5 மற்றும் 6 பதிவுசெய்யப்பட்டது மேலும் இ.பி.மனுவில் கதவு இலக்கு 4,5,6 புதிய கதவு எண்.5,6 என்று குறிப்பிடப்பட்டுள்ளது ஆகையால் இறுசொத்துக்களும் வெவ்வேறு என்றால்

சரியல்ல. இபி மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள செக்பந்தி வேறு ம.சா.ஆ.6 உள்ள குறிப்பிட்டுள்ள செக்பந்தி மற்றும் தெரு வேறு என்றால் சரியல்ல. மா.சா.ஆ.4 ல் 4 செக்பந்திகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 4 செக்பந்திகளும் இபி மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள செக்பந்திகள் வேறு என்றால் சரியல்ல. நிறைவேற்றுமனு சொத்தில் போடப்பட்டுள்ள சொத்தானது 4,5,6 கூரை வீடு தான் என்றால் சரிதான். தற்போது கூரை வீடு மக்கிபோய் காலி இடமாக உள்ளது. எனது அக்கு விடுதலை பத்திரத்தில் கூரை வீடு மக்கிபோய் காலியாக உள்ளத என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. யாரோ ஒரு செல்வம் என்பரை அழைத்து வந்து தாவா சொத்திற்கு சம்பந்தமில்லாத கதவு எண்.7 என்று குறிப்பிட்டு போலியான ஆவணங்களை தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த நீதிமன்றம் ஏற்கனவே தீர்ப்பானதை வைத்து நிறைவேற்று மனு படித்தான் நடக்கவேண்டுமே தவிர தீர்ப்பை நிறுத்திவைக்வோ மாற்றவோ இந்நீதிமன்றத்திற்கு அதிகாரமில்லை என்றால் சரியல்ல. ஏல நடவடிக்கைகளை ரத்து செய்ய வேண்டும் என்று பரிகாரம் கேட்டுள்ளேனா தவிர நிறைவேற்று மனுவை தள்ளுபடி செய்ய பரிகாரம் கேட்கவேண்டும் என்றால் சரியல்ல. நான் இந்த மனுவை சட்டப்பிரிவு 47 ல் தாக்கல் செய்தது தவறு என்றால் சரியல்ல. நான் சொத்தில் உரமை கோருவது உண்மை என்றால் அதனை நிரூபிணம் செய்ய உரிமையியல் நீதிமன்றத்தில்தனி தாவா தாக்கல்ங செய்து எனக்கு பாத்தியப்பட்ட சொத்தில் உள்ள வில்லங்கத்தை ஏற்படுத்திய அடமானத்தை ரத்து செய்யவும் சார் பதிவாளர் அவர்களை வில்லங்கத்தில் மேற்படி எண்ரியை ரத்து செய்ய கோரியும் தனி தாவா தாக்கல் செய்திருக் வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. அடமானத்தை ரத்து செய்ய நீதிமன்றத்தில் நிறைவேற்று மனுவை ரத்து செய்ய தாக்கல் செய்தது தவறு என்றால் சரியல்ல. இந்த மனு தள்ளுபடி தகுந்தது என்றால் சரியல்ல. தவறான மனு என்பதால் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read
over of the deponent and acknowledged
by her/him to be correct.

Sd/.M.N.RAJANANDHIVARMASIVA,
DISTRICT MUNSIF